[2nd November 1962

(இ) கஞ்சாபுரம் பஞ்சாயத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்துப் பணத்தைக் கையாடியதற்குப் பஞ்சாயத்துத் தலைவர் பொறுப்பாளியல்ல என்று கணக்குத் தணிக்கையிலிருந்து தெரிந்தது. புதுப்பட்டிப் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சாயத்துப் பணத்திலிருந்து 7 ரூபாய் தற்காலிகமாகக் கையாடியுள்ளதாக தெரிகிறது. அதற்காகவும், மற்றும் சில ஊழல்களுக்காகவும் அந்தப் பஞ்சாயத்துத் தலைவரைப் பதவியை விட்டு நீக்க நடவடிக்கை எடுத்து வரும்போது, அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால், பஞ்சாயத்து தலைவர் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவின்மேல் உயர்நீதி மன்றம் ரிட் மனு பைசலாகும்வரையில் அவர் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆஸ்தான கவிஞர்கள்

*1143 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கத்தின் செலவில் ஆஸ்தான கவிஞர்கள் யாரேனும் நியமிக்கப்பட்டுள்ளனரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இல்லை, ஐயா.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, நமது அரசாங்கம் ஆஸ்தான கவிஞர்களாக யாரையாவது நியமித்திருக்கிறதா ? நியமித்திருந்தால், யார் யார் என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு முறை ஆஸ்தான கவிஞர்கள் நியமிக்கப்பட்டார்கள். தமிழுக்கும், மலையாளத்திற்கும், கன்னடத்திற்கும், சமஸ்கிருதத்திற்கும், தெலுங்கிற்கும் ஆஸ்தான கவிஞர்கள் நியமிக்கப்பட்டார்கள். தமிழைப் பொறுத்தவரையில், நாமக்கல் கவிஞர் திரு. இராமலிங்கம்பிள்ளை அவர்கள் ஆஸ்தான கவிஞராக நியமிக்கப்பட்டிருந்தார்.

Salem district (bifurcation)

*1144 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the details of the proposal to bifurcate Salem district; and

(*b*) whether a copy of the report of the Special Officer appointed for that purpose will be placed in the Legislature Library?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) A Special Officer in the grade of Collector has been appointed to work out the scheme for bifurcation of Salem district territorially. The report of the Special Officer is awaited.